**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இ.ம.எண். 2/2026 அதன் அ.வ.எண்.228/2024**

பால்செல்வக்குமார் ... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

–எதிர்–

1) பாலசுப்பிரமணியன்
2) MDK சண்முகநாதன்
3) T.R.திருமலையப்பன்

... எதிர்மனுதாரர்கள் /வாதி & 2, 3 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 10.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.கேப்ரி ராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.I.விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும் இருதரப்பு வாதத்தை கேட்டறிந்தும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் மனுதாரர் சாட்சியத்திற்கு முன்பாக வட்டாட்சியர், பாளையங்கோட்டை அவர்கள் 1ம் எதிர்மனுதாரர் குத்தகைதாரராக பதிவு செய்ய வேண்டி கொடுத்த மனு எண் ந.க.அ.3–

4992-2025 விசாரணை அறிவிப்பு ஆகியவை அடங்கிய கோப்புகளை கொண்டு வந்து 1ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டி உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 18 விதி 3A மற்றும் 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) அசல் வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் எதிர்மனுதாரர் தாவா தபசில் சொத்தில் குத்தகைதாரராக பதிவு செய்ய வேண்டி மனுதாரர் மற்றும் காலம் சென்ற செல்லத்துரையின் வாரிசுகளை சேர்த்து பாளையங்கோட்டை வட்டாட்சியரிடம் மனு செய்துள்ளார். ஷை மனு ந.க.அ.3-4992-2025 ஆக பதிவெண் கொடுக்கப்பட்டு அதில் விசாரணை அறிவிப்பு மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டு 05.06.2026ம் தேதியன்று விசாரணைக்கு வாய்தா போடப்பட்டிருந்து. அன்றைய தினம் வட்டாட்சியரின் விடுப்பு காரணமாக விசாரணை நடைபெறவில்லை.

2.2) அசல் வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் எதிர்மனுதாரர் பாளையங்கோட்டை வட்டாட்சியரின் முன்பாக தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு முரணான செயலாகும். மேற்படி மனு செய்தது தொடர்பாகவும் அதில் விசாரணை அறிவிப்புகள் சார்பு செய்தது பற்றியும், மேற்படி மனு மற்றும் ந.க.அ 3-4992-2025ன் கோப்புகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பாளையங்கோட்டை வட்டாட்சியரின் சாட்சியம் அளிக்க வேண்டியது இவ்வழக்கிற்கு இன்றியமையாததாகும். எனவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிருரையின் சுருக்கம்</u>**

3.1) மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவுப்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் மனு செய்யப்பட்டு அந்த மனுவின் அடிப்படையில் பாதி விசாரணை நிலுவையில் இருக்கும்போது தாமிரபரணி ஆற்றில் அதிக மழையினால் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மேற்கண்ட வட்டாட்சியர் அலுவலகம் கீழ்பகுதி கட்டிடத்தில் உள்ள அனைத்து வழக்கு சம்பந்தமான கட்டுகள், கோப்புகள் எல்லாம் இயற்கை பேரழிவினால் எதிர்மனுதாரர் வழக்கு கோப்பு அதன் ஆவணங்களும் வெள்ளத்தில் சென்றுவிட்டது. எனவே புதியதாக மனு தாக்கல் செய்து வழக்கை தொடங்குங்கள் என்று வட்டாட்சியர் அலுவலகத்தில் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் மீண்டும் மனுவை வட்டாட்சியர் அலுவலகத்தில் தாக்கல் செய்துள்ளார் என்பது தான் உண்மையாகும். வட்டாட்சியரை விசரணை செய்ய வேண்டியது இவ்வழக்கிற்கு தேவையில்லததாகும். அசல் வழக்கை இழுத்தடிக்கவும் நீதிமன்ற நேரத்தை வீணடிக்கவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>தீர்வு</u>**

**4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

5) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6) அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதிக்கு பாளையங்கோட்டை வட்டாட்சியரின் உழவுடையதாரர் என்ற உத்தரவு நிலுவையில் இருந்தும் வாதியின் அனுபவத்தில் இருந்து வரும் பிராது தபசில் சொத்தின் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அவர்களது முகவர்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் தரப்பில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் எதிர்மனுதாரர் பாளையங்கோட்டை வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவிற்கு ந.க.அ3–4992–2025 ஆக பதிவு எண் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த மனுவின் அடிப்படையிலான ஆவணங்கள் வெள்ளத்தில் அழிந்ததால் வட்டாட்சியர் அலுவலர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் மனு கொடுத்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

8) அசல் வழக்கு நிலுவையில் உள்ளபோது ஏற்படுத்தப்படும் ஆவணங்கள் அசல் வழக்கின் தீர்ப்பை கட்டுப்படுத்தாது. மேலும் மனுதாரருக்கு விசாரணை அறிவிப்பு வந்ததாக கூறியுள்ளார். எனவே மேற்படி அறிவிப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்து 1ம் எதிர்மனுதாரர் வட்டாட்சியரிடம் மனு அளித்துள்ளார் என்பதை நிரூபித்தால் போதுமானதாகும்.

9) இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக வட்டாட்சியர் பிறப்பிக்கும் உத்தரவு இந்த வழக்கை கட்டுப்படுத்தாது என்பதாலும் இந்த வழக்கிற்கு பின்னிட்டு 1ம்

எதிர்மனுதாரர் அளித்த மனுவின் அடிப்படையிலான ஆவணங்களை கொண்டு வந்து வட்டாட்சியரை சாட்சியம் அளிக்க கோருவதால் மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கை தீர்மானிக்க பயன்படாது என்பதாலும் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10) இறுதியாக**

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

orders uploaded on 12.08.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.08.12 19:24:58 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிபதி திருநெல்வேலி

<u>**மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்– இல்லை**</u>

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்– இல்லை**</u>

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

orders uploaded on 12.08.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.08.12 19:24:51 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிபதி திருநெல்வேலி

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண். 2/2026 அதன்**

**அ.வ.எண்.228/2024**

சீரான / வரைவு

உத்தரவு

11.08.2026